# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**01.09.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மத்திய செய்திகள்

### 1. ஜிடிபி 13.5% உயர்வு

- நிகழ் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) **13.5% அதிகரித்துள்ளது.**
- கடந்த 2021-22 நிதியாண்டின் கடைசி மூன்று காலாண்டுகளில் பதிவான விகிதத்தை காட்டிலும் நிகழாண்டின் முதல் காலாண்டில் ஜிடிபி 13.5% அதிகமாக பதிவாகியுள்ளதாக தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) தெரிவித்துள்ளது.
- 2023 நாட்டின் பொருளாதார வளர்ச்சி **7 முதல் 7.5 சதவீதமாக** அதிகரிக்கும்.

### 2. ஸ்மார்ட் பாக்ஸர்

- சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் **இன்ஸ்பயர் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஸ்போர்ட்ஸ்** (ஐஐஎஸ்) உடன் இணைந்து 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் பதக்கங்களை அதிகரிக்க செய்ய மேம்பட்ட குத்துச்சண்டை பகுப்பாய்வு மென்பொருளை உருவாக்கி வருகின்றனர்.
- சென்னை ஐஐடியின் விளையாட்டு அறிவியல் மற்றும் பகுப்பாய்வுக்கான தனிச்சிறப்பு மையம் 'ஸ்மார்ட் பாக்ஸர்' என்ற பகுப்பாய்வு மென்பொருளை உருவாக்கி வருகிறது.
- அணியக்கூடிய சென்சார்கள் மற்றும் வீடியோ கேமராக்களை பயன்படுத்தி **'இன்டர்நெட்-ஆப்ஸ்-திங்க்ஸ்'** மூலம் பின்னூட்டம் மற்றும் செயல் திறன் மதிப்பீடுகளை இந்த பகுப்பாய்வு தளம் வழங்கும்.
- **எவ்வாறு செயல்படுகிறது?**
  - இன்டர்நெட் ஆப் திங்க்ஸ் அடிப்படையில், பஞ்ச்-இன் வேகத்தை ஆய்வு செய்யும் வகையில் சென்சாருடன் கூடிய கையுறைகள் தரை வினை விசையை பதிவு செய்வதற்காக **வயர்லெஸ் புட் இன்சோலுடன்** கூடிய அழுத்தமானி விளையாட்டு வீரர்கள் உடலின் கீழ்பகுதியில் இயக்கத்தை பதிவு செய்வதற்காக வயர்லெஸ் இ.எம்.ஜி சென்சார்கள் விளையாட்டு வீரர்கள் உடலின் மேல் பகுதியில் இயக்கத்தை பதிவு செய்வதற்காக இயக்க சக்தி அளவீட்டு அலகு ஆகியவை பயன்படுத்தப்படுகிறது.

### 3. ஜி-20 கூட்டமைப்பு நாடு

- பருவநிலை மாறுபாடு பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் இந்தியா உறுதியாக செயல்படுகிறது என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் **பூபேந்தர் யாதவ்** தெரிவித்தார்.
- **இந்தோனேஷியாவின் பாலிதீவில் ஜி-20** கூட்டமைப்பு நாடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை துறை அமைச்சர்களின் கூட்டம் தொடங்கியது.
- கூட்டம் அமைப்பில் ஆர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, மெக்ஸிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா துருக்கி, பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

### 4. இணைய வழி குற்றங்கள் ஐந்து சதவீதம் அதிகரிப்பு

- இந்தியாவில் இணையவழியில் நடைபெறும் குற்றங்கள் கடந்த ஆண்டில்

(2021) 5 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது.

- முந்தைய ஆண்டில் இது 15 சதவீதம் அளவுக்கு அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.
- 2021 ஆம் ஆண்டில் **தெலுங்கானா, உத்தர பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரம், அசாம்** ஆகிய மாநிலங்களில் தான் அதிக அளவில் இணைய வழி குற்றங்கள் பதிவாகியுள்ளன.
- இணையவழி குற்றங்களில் 60.8% நிதி உள்ளிட்ட மோசடிகள் மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக உள்ளது.
- இதற்கு அடுத்து 8.6 சதவீதம் பாலியல் ரீதியான இணையவழி குற்றங்கள் ஆகும்.
- 5.4 சதவீதம் மிரட்டுவது, அச்சுறுத்துவது போன்ற குற்றங்கள் ஆகும்.
- தெலுங்கானாவில் அதிகபட்சமாக **10,303 இணையவழி குற்றங்கள்** பதிவாகியுள்ளன.
- பெண்கள், குழந்தைகளுக்கு எதிராகவும் இணையவழியில் குற்றங்கள் அதிகம் நடைபெறுகின்றன.
- தகவல் திருட்டு, டெபிட், கிரெடிட் கார்டு மோசடிகள் இணையவழியில் நடப்பது அதிகம் உள்ளது.

### 5. கருப்பை வாய் புற்று நோய்க்கு உள்நாட்டு தடுப்பூசி

- கருப்பை வாய் புற்று நோய்க்கு உள்நாட்டில் முதல் முறையாக தயாரிக்கப்பட்டுள்ள தடுப்பூசி அறிமுகம் செய்யப்படவுள்ளது.
- கருப்பை வாய் புற்று நோய்க்கு எதிரான தடுப்பாற்றலை அளிக்கும் செர்வாவேக் தடுப்பூசியை **'சீரம் இந்தியா'** நிறுவனம் தயாரித்துள்ளது.
- இது கருப்பை வாய் புற்று நோய்க்கு முக்கிய காரணியான **ஹியூமன் பாப்பிலோமா தீநுண்மிக்கு** எதிராக செயல்படும்.

### 6. தில்லியில் காணொளி பள்ளி

- நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் ஒன்பது முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் சேர்ந்து படிக்கும் வகையில் காணொளி பள்ளியை **(விர்ச்சுவல் ஸ்கூல்-டிஎம்விஎஸ்)** தில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவால் தொடங்கி வைத்தார்.
- நாடு முழுவதும் உள்ள 13 முதல் 18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு பள்ளிக்கல்வி அளிப்பதற்கான சேர்க்கை இந்த காணொளி பள்ளியின் மூலம் தொடங்கப்படும்.
- மாணவர்கள் திறன் சார்ந்த பயிற்சி உடன் **நீட், க்யூட் மற்றும் ஜேஇஇ** போன்ற நுழைவுத் தேர்வுகளுக்காக பயிற்சியும் வல்லுநர்கள் மூலம் அளிக்கப்படும்.
- நாட்டிலேயே முதன்முதலாக இந்த காணொளி பள்ளி அமைக்கப்பட்டு இருப்பது கல்வித்துறையில் ஒரு மயில்கல்லாக இருக்கும் என்பதை நிரூபிக்கும்.

### 7. மகசேசே விருது

- ஆசியாவின் நோபல் பரிசு என்று அழைக்கப்படும் **பிலிப்பைன்ஸ் மகசேசே விருதுக்காக** கம்போடியாவில் அரசின் அடக்குமுறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய மனநல மருத்துவர் **சொதியாரா சிம்**, வன்கொடுமைக்குள்ளான ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உதவிய பிலிப்பின்ஸ் மருத்துவர் **பெர்னடெட் மேட்ரிக்** ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### 8. மிகயீல் கோர்பசேவ் மறைவு

- சோவியத் யூனியன் கடைசி அதிபரும் பனிப்போரை முடிவுக்கு கொண்டு வந்தவருமான **மிகயீல் கோர்பசேவ்** உடல் நலக்குறைவால் தனது 91 வது வயதில் காலமானார்.

- சோவியத் யூனியன் ஆட்சியாளராக கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்த அவர் பனிப்போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச அளவில் போற்றப்பட்டார்.
- அவரது கடுமையான உழைப்பு காரணமாக 17 வயதிலேயே மிக அபூர்வமான முறையில் அவருக்கு உழைப்பாளருக்கான **சிவப்பு பட்டை விருது** வழங்கப்பட்டது.
- பனிப்போரை முடிவுக்கு கொண்டு வந்ததற்காக கோர்பஸ் சேவுக்கு கடந்த **1990 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு** வழங்கப்பட்டது